செ.வெ.எண்.49 நாள். 26.12.11

**நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு 28.12.2011 அன்று வருகை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு 28.12.2011 அன்று வருகை தரவுள்ளது. மனுக்கள் குழுவின் தலைவர் அரசு தலைமை கொறடா திரு.ப.மோகன், அவர்கள் தலைமையில் உறுப்பினராக 9 சட்டமன்ற உறுப்பினர்கள் இக்குழுவில் உள்ளனர். இக்குழுவில் இடம்பெற்றுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் 1. திரு.ஆர்.அருள்செல்வன், (மயிலாடுதுறை), 2. திரு.பா.கணேசன், (உத்திரமேரூர்) 3. திரு.ஆர்.என்.கிட்டுசாமி, (மொடக்குறிச்சி), 4. திரு.எஸ்.எஸ்.சிவசங்கர், (குன்னம்), 5. திரு.டி.சுரேஷ்குமார் (செங்கம்), 6. திரு.ந.நஞ்சப்பன் (பென்னாகரம்), 7. திரு.கே.பொன்னுசாமி (தாராபுரம்), 8.திரு.ஆ.ராமசாமி (நிலக்கோட்டை), 9.திருமதி.ப.விஜயலட்சுமி பழனிசாமி (சங்ககிரி), தமிழ்நாடு சட்டப்பேரவை மனுக்கள் குழுவினர் 28.12.2011 அன்று காலை 10.30 மணியளவில் நாமக்கல் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் நாமக்கல் மாவட்டத்தில் தற்போது பெறப்பட்ட மனுக்களின் மீது மனுதாரர்கள் முன்னிலையில் அரசுத்துறையின் பதில் அறிக்கைகளை ஆய்வு செய்யவுள்ளார்கள். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஜெ.குமரகுருபரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.